# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2017 சனவரி

# (AA21) உயர் நிதிக் கணக்கீடு

## பகுதி A

நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

பகுதி A, 7 கட்டாய வினாக்களையும் மொத்தமாக 20 புள்ளிகளையும் கொண்டிருந்தது. இது உயர் நிதிக் கணக்கீட்டுப் பாடத்திட்டத்தை உள்ளடக்கிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு நிலையான சொத்துக்களின் தேய்மானம், இலாப நோக்கற்ற நிறுவனங்கள், கட்டுப்பாட்டுக் கணக்குகள், உரிமையாண்மைப் பங்குகள் மற்றும் தனிச்சங்களின் அடிப்படைகள் மற்றும் பங்குடமை சட்டம் ஆகியன பற்றிய அறிவு பரீட்சிக்கப்பட்டிருந்தது.

அதிகளவான பரீட்சார்த்திகள் வினா இல. 1.4 மற்றும் 1.5 ஆகியவற்றுக்குச் சரியாக விடையளிக்க வில்லை. வினா இல. 1.4 இற்காக, பரீட்சார்த்திகள் தனிச்சங்களை வழங்குவதன் மூலம் கம்பனிக்குக் கிடைக்கும் அனுகூலங்களை எழுதுவதற்குப் பதிலாக தனிச்சங்களை வைத்திருப்பவர் களுக்குக் கிடைக்கும் அனுகூலங்களை எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ளாத காரணத்தால் இவ்விரண்டு வினாக்களுக்கும் சரியான விடைகளை வழங்குவதற்குத் தவறியிருந்தனர். வினா இல. 1.6 இற்காக, பல பரீட்சார்த்திகள் நாட்குறிப்புப் பதிவுகளுக்கான சரியான விவரிப்புகளை எழுதியிருக்கவில்லை. மேலும், சில பரீட்சார்த்திகள் அவற்றின் பங்குகளின் சரியான எண்ணிக்கை மற்றும் பெறுமதியைக் கணிப்பிடுவதற்கும் தவறியிருந்தனர். வினா இல. 1.7 இற்காக, 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் மீதான கோட்பாட்டு அறிவு பரீட்சார்த்திகளிடம் மிகக் குறைவாகவே காணப்பட்டது.

பொதுவாக, பெரும்பாலான பரீட்சார்த்திகள் ஏனைய வினாக்களுக்கு புள்ளிகளை ஈட்டக்கூடியதாக இருந்தது. பரீட்சார்த்திகள் பாடத்திட்டத்தைப் படிப்பதுடன் சுய கற்றல் புத்தகத்தையும் கற்பதன் மூலம் தங்களுடைய அறிவை மேம்படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

## பகுதி B

ஐந்து (05) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

வர்த்தக சென்மதியாளர் (கடன் கொடுத்தோர்) கணக்கினைத் தயாரித்தல் மற்றும் 2016 யூலை 31 ஆந் திகதி வியாபாரச் சென்மதியாளர் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதியை அதே தேதியிலுள்ள தனித்தனி வியாபார சென்மதியாளர் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையுடன் கணக்கிணக்கம் செய்யும் கூற்றினைத் தயாரித்தல் ஆகியவற்றுக்காக புள்ளிகள் ஒதுக்கப்பட்டிருந்தன. பெரும்பாலான பரீட்சார்த்திகள் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர். கட்டுப்பாட்டுக் கணக்கில் குறிப்பிடப்பட வேண்டிய உருப்படிகளை கணக்கிணக்கக் கூற்றில் காட்டியிருந்த பரீட்சார்த்திகள் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். சிலர் கட்டுப்பாட்டுக் கணக்கின் ஆரம்ப மீதிக்கான மற்றும் ஊடுசெயல்களுக்கான வரவுகள் மற்றும் செலவுகளை சரியாக அடையாளம் கண்டிருக்கவில்லை.

## வினா 03

இங்கு பங்குடமை ஒன்றின் இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கினைத் தயாரிக்கும் அறிவு பரீட்சிக்கப்பட்டது. பரீட்சார்த்திகளால் சில பரப்புகளுக்கு வெற்றிகரமாக விடையளிக்க முடிந்திருந்தது. எவ்வாறாயினும், இலாப அல்லது நட்டப் பகிர்வுக் கணக்கிற்குப் பதிலாக நடைமுறைக் கணக்கு களைத் தயாரித்தல், எடுப்பனவுகள் மீதான வட்டியைச் சரியாகக் கணிப்பதில் தவறியிருந்தமை, இலாப அல்லது நட்டப் பகிர்வுக்கு சரியான விகிதங்களைப் பயன்படுத்தாமை போன்ற சில வழுக்கள் அவதானிக்கப்பட்டன. சில பரீட்சார்த்திகள், பங்காளர் ஒருவரின் **(ரொஷான்)** எடுப்பனவுகள் மீதான அரையாண்டுக்குரிய வட்டியைச் சரியாகக் கணிப்பதற்குப் பதிலாக முழு ஆண்டிற்குமான வட்டியைக் காட்டியிருந்தனர்.

## வினா 04

இங்கு செம்மையாக்கப்பட்ட காசேடு மற்றும் வங்கி கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றைத் தயாரிக்குமாறு கோரப்பட்டிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் திருப்திகரமான அளவு புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப்பட்ட காசேட்டுடன் தொடர்புடைய பதிவுகளைக் கண்டுகொள்ளாததினால் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். அவர்களிடம் செம்மையாக்கப்பட்ட காசேட்டைத் தயாரிப்பது தொடர்பிலான முறையான விளக்கம் காணப்படவில்லை.

பல பரீட்சார்த்திகள் செம்மையாக்கங்களின் பின்னரான காசேட்டின் சரியான மீதியை வங்கி கணக்கிணக்கக் கூற்றுக்கு கொண்டு வரத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செம்மையாக்கப் பட்ட காசேட்டில் குறிப்பிடப்பட வேண்டிய செம்மையாக்கங்களை வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் குறிப்பிட்டிருந்ததால் புள்ளிகளை இழந்திருந்தனர்.

## வினா 05

இவ்வினா முடிவடைந்த நிதியாண்டில் உள்ளபடியான நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் ஒன்றின் மூலதனப்படுத்தப்பட வேண்டிய செலவுகள் மற்றும் கட்டடத்தின் முன்கொணரற் பெறுமதி ஆகியவற்றை கணிப்பிடுவதற்காக அமைக்கப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் மூலதனப்படுத்தப்பட்ட தொகைக்காக மாநகர சபை வீதங்களைக் கருத்திற்கொண்டிருந்தனர். சிலர் முன்கொணரற் பெறுமதியைக் கணிப்பிடும்போது திரள் தேய்மானத்தைச் சரியாக செம்மையாக்கம் செய்திருக்கவில்லை என்பதுடன் சிலர் நிர்மாண ஆண்டைக் கருத்திற்கொள்ளாது தேய்மானத்தை செம்மையாக்கம் செய்திருந்தனர். எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்குத் திருப்திகரமாக விடையளித்திருந்தனர்.

## வினா 06

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனங்களின் கணக்குகள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காக அமைக்கப்பட்டிருந்தது. பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் சொற்பளவிலேயே காணப்பட்டன. ஆண்டின் ஆரம்பத்தில் திரண்ட நிதியை கணிப்பிடுவதற்கான அடிப்படை அறிவைக் கொண்டிராத பரீட்சார்த்திகளும் இங்கு காணப்பட்டனர். மேலும், சில பரீட்சார்த்திகள் திரண்ட நிதியாக ஆண்டிற்கான சந்தாவைக் காட்டியிருந்தனர். இன்னும் சில பரீட்சார்த்திகள் அட்டுறுக்களையும் முற்கொடுப்பனவு செய்யப்பட்ட சந்தாக்களையும் சரியாகச் செம்மையாக்கம் செய்வதற்குத் தவறியிருந்ததுடன் கோட்பாட்டு ரீதியான வழுக்களையும் விட்டிருந்தனர். சிலர் சம்பந்தப்பட்ட கணக்குகளில் ஆரம்ப மீதிகளைச் சரியாகப் பதிவுசெய்வதற்குத் தவறியிருந்தனர்.

# பகுதி C

மூன்று (03) கட்டாய வினாக்கள்
(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

இங்கு விளையாட்டுக் கழகம் ஒன்றிற்காக முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கணக்கினைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள் கழகங்கள் மற்றும் சங்கங்களின் சந்தாக்களைக் கணிப்பிடுவதற்கான தங்களது அறிவினை மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். வினாவைச் சரியாக விளங்கிக்கொண்டிருந்த பரீட்சார்த்திகள் உயர் புள்ளிகளைப் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஆரம்ப மீதிகளையும் இறுதி மீதிகளையும் சரியாக அடையாளங் காணாததுடன் அவற்றினைச் சரியாக செம்மையாக்கமும் செய்யவில்லை. சந்தாவைக் கணிப்பிடுவது இலகுவானதாக இருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அதனைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் செய்கை வழிகளையும் செம்மையாக்கங்களையும் தெளிவாகக் காட்டியிருக்கவில்லை.

## வினா 08

தனியுடைமையாளர் வியாபாரம் ஒன்றிற்கான வருமானக்கூற்று மற்றும் நிதிநிலைக்கூற்று என்பன அடிப்படைத் தரவுகளைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட வேண்டியிருந்தது. முழுப் புள்ளிகளையும் பெற்ற பரீட்சார்த்திகளின் சதவீதம் மிகக் குறைவானதாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. ஆண்டின் ஆரம்பத்தில் இருக்கும் கொள்வனவுகள் மற்றும் மூலதனத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு செம்மையாக்கப்படும் ஆரம்ப மீதிகளின் மூலம் சரியான தரவு கண்டுபிடிக்கப்படல் வேண்டும். இதனைச் செய்வதற்குத் தவறியிருந்த காரணத்தால், ஆண்டின் ஆரம்பத்திலிருந்த மூலதனம் மற்றும் வியாபாரக் கணக்கு ஆகியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகள் இழக்கப்பட்டிருந்தன. ரூ.5,000,000/- கடனுக்குச் செலுத்தப்பட்ட வட்டி, சரியாகக் கணிப்பிடப்படாததுடன் சில பரீட்சார்த்திகள் முழு ஆண்டிற்காகவும் வட்டியைக் கணக்கிட்டிருந்தனர். கணக்கீட்டு நியமங்கள் மீதான விளக்கம் மேம்படுத்தப்பட வேண்டும்.

## வினா 09

பங்காளர்களின் நடைமுறைக் கணக்குகளை நிரல் வடிவில் தயாரித்தல் மற்றும் நிதிநிலைக்கூற்று தயாரித்தல் என்பன இவ்வினாவில் எதிர்பார்க்கப்பட்டது. அளிக்கப்பட்ட சரியான விடைகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகும். பெரும்பாலான பரீட்சார்த்திகள், இலாபத்தைக் கணிப்பிடு வதற்கான புள்ளிகளையும் சரியான விகிதத்தில் பங்காளர்களிடையே இலாபத்தைப் பகிர்வதற்கான புள்ளிகளையும் பெறுவதற்குத் தவறியிருந்தனர். நடைமுறைக் கணக்கு மற்றும் இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு ஆகியவற்றைச் சரியாகக் தயாரிக்கத் தவறியிருந்தமையே இதற்கான காரணமாக இருந்தது. சில பரீட்சார்த்திகள் பங்காளரால்(நிஷாந்த) பெற்றுக்கொள்ளப்பட்ட கடனுக்கான வட்டியை இலாபத்திற்காகச் செம்மையாக்கம் செய்யவில்லை என்பதுடன் அதனை ஒரு நடைமுறைச் சொத்தாகக் காட்டவும் இல்லை. பங்குடமையின் அடிப்படை அறிவைச் சோதிப்பதற்கு அமைக்கப் பட்டிருந்த இவ்வினாவுக்கான முழுப் புள்ளிகளையும் பெற்ற பரீட்சார்த்திகளின் சதவீதம் மிகவும் குறைவானதாகும்.

## பகுதி D

ஒரு கட்டாய வினா

(25 புள்ளிகள்)

### வினா 10

கம்பனியொன்றின் முகாமையின் பாவனைக்காக முற்றடக்க வருமானக் கூற்று மற்றும் நிதிநிலைக் கூற்று ஆகியவற்றை தயாரிப்பதற்கு இவ்வினா தேவைப்படுத்தியிருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் அழிவடைந்த பொருட்கள் மற்றும் தனிச்ச வட்டி ஆகியவற்றுக்கான செம்மையாக் கங்களைச் சரியாகச் செய்யவில்லை. பரீட்சார்த்திகள் கணக்கீட்டு நியமங்கள் (LKAS) தொடர்பில் அவதானஞ்செலுத்துதல் வேண்டும். அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக விடையளித் திருந்தனர். பரீட்சார்த்திகள் சரியான மாதிரிகள் மற்றும் வடிவங்களைப் பயன்படுத்தி விடையளிக்க முயற்சித்திருந்தனர். மொத்தத்தில், இவ்வினா கம்பனிக் கணக்குகள் தொடர்பான அறிவைச் சோதிப்பதற்கு இலகுவான செம்மையாக்கங்களை உள்ளடக்கியிருந்தது. இவ்வினா முற்றடக்க வருமானக் கூற்றை சரியான மாதிரியில் முன்வைப்பதை எதிர்பார்த்திருந்தது.

வரவு மீதி பற்றி கவனஞ்செலுத்தாது செலவு மீதியொன்றாக கைக்கொள் இலாபத்தினை பிரித்தெடுத்த பரீட்சார்த்திகளும் காணப்பட்டனர். நிர்வாக, விநியோக மற்றும் நிதிச் செலவுகளுக்கான செய்கைகளைச் செய்திருந்த பரீட்சார்த்திகள் அதற்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தனர். கணக்கீட்டு நியமங்கள் தொடர்பான அடிப்படை அறிவைக் கொண்டிராதது சில பரீட்சார்த்திகளின் பலவீனமாகக் காணப்பட்டது. அட்டுறு மற்றும் முற்கொடுப்பனவு செய்யப்பட்ட செலவினக்கள் தொடர்பான செம்மையாக்கங்களைச் செய்வதற்கு வரவுகள் மற்றும் செலவுகள் மீதான அடிப்படை விளக்கத்தைக் கொண்டிராத சில பரீட்சார்த்திகள் இருந்தமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. பரீட்சார்த்திகள், நிதிநிலைக்கூற்று மற்றும் முற்றடக்க வருமானக் கூற்று ஆகியவற்றில், சரியான இடங்களில் பொருத்தமான பதிவுகளைக் குறிப்பதில் கவனமாயிருத்தல் வேண்டும்.

சில பரீட்சார்த்திகள், வருமான வரி, அழிவடைந்த பொருட்கள் மற்றும் தனிச்ச வட்டி ஆகியவற்றுக்கான செம்மையாக்கங்களைச் சரியாகச் செய்யாத காரணத்தால் புள்ளிகளைப் பெறத் தவறியிருந்தனர். விடையளிக்கும்போது நேர முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தைக் கவனத்திற் கொண்டு, வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளதோ அதற்கு மாத்திரம் விடையளிப்பது அதிக புள்ளிகளைப் பெற உதவும். அதிகளவான பரீட்சார்த்திகள் தேய்மானத்தைச் சரியாகக் கணிப்பிடத் தவறியிருந்தனர்.

**பொதுவான கருத்துக்கள் :**

பரீட்சார்த்திகள் அடிப்படைக் கணக்கீட்டுக் கோட்பாடுகள், புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கம்பனிச் சட்டங்கள் போன்றவற்றில் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். வினாக்களுக்கு விடையளிக்கும்போது வினா இலக்கங்களை தனித்தனிப் பக்கங்களில் எழுதுக (சில பரீட்சார்த்திகள் வினா இலக்கங்களாக பக்க இலக்கங்களை எழுதுகின்றனர்). இயலுமானவரை விடைகளுக்குப் பக்கத்திலேயே செய்கை வழிகளையும் காட்டுக. ஒரு வினாவின் பகுதிகளுக்கான விடைகளை பல்வேறு பக்கங்களிலும் எழுதுவதைத் தவிர்க்கவும். அவ்வாறு எழுதுவதாயின் சம்பந்தப்பட்ட பக்கத்தை சுட்டிக்காட்டுவது முக்கியமானதாகும்.

மேலும், பரீட்சார்த்திகள் கம்பனிச் சட்டம், 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச் சட்டம் மற்றும் கணக்கீட்டு நியமங்கள் பற்றிய தமது அறிவை மேம்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுடன் கணக்கீடு பற்றிய கோட்பாட்டு அறிவையும் மேம்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

\- - -

**பரீட்சார்த்திகளின் விளங்கிக்கொள்ளும் மட்டத்தினை விருத்திசெய்வதற்குக் கவனத்திற் கொள்ளவேண்டிய பொதுவான விடயங்கள்**

1. வினாப்பத்திரத்தைக் கையில் எடுத்ததும் தரப்பட்ட அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்கவும்.

2. வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடையளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

3. பரீட்சையின்போது நேரத்தை வினைத்திறனான முறையில் பயன்படுத்தவும்.

4. விடைத்தாளை ஒப்படைப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் மற்றும் உங்களது சுட்டிலக்கம் என்பன சரியாக எழுதப்பட்டுள்ளதா என்பதைப் பரீட்சிக்கவும்.

5. கடந்தகால வினாப்பத்திரங்களுக்கு விடையளிப்பதன் மூலம் நீங்கள் பாடம் சம்பந்தமான அறிவினை மேம்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன் விடைகளை எழுதுவதற்கான ஆற்றலும் கிடைக்கப்பெறும்.

6. வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல்வினைச்சொல் நிரல் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச் சொல் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

7. சித்தியடைதல் என்னும் பிரதான நோக்கத்துடன் பரீட்சையினை எழுதவும்.

- * * * -